டிசம்பர் - 2013

திருவள்ளுவர் ஆண்டு 2044

செந்தமிழ்

தொகுதி : 58
பகுதி : 2

விலை ரூ. 10/-

திங்கள் இதழ்

மதுரைத் தமிழ்ச்சங்கம்
14-09-1901
THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு



மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியுதவியுடன் கட்டப்பட்ட புதிய வகுப்பறைகளை
மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர் மு.க. அழகிரி அவர்கள் தொடங்கி வைத்தார்.
உடன் செந்தமிழ்க் கல்லூரிச் செயலர் திரு. கோச்சடை இரா. குருசாமி அவர்கள்,
மதுரைத் தமிழ்ச்சங்கச் செயலர் திரு. இரா. அழகுமலை அவர்கள்,
திரு. சுகுமார் அவர்கள், இரா. ரமணி அவர்கள்

செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 58 திங்கள் இதழ்

பகுதி : 2 திருவள்ளுவர் ஆண்டு 2044

திசம்பர் 2013

வள்ளல் பாண்டித்துரைத்தேவர்

21.03.1867-02.12.1911

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	ரூ. 100	ரூ. 600
ஆயுள் கட்டணம்	ரூ. 1000	
புரவலர் கட்டணம்	ரூ. 5000	ரூ. 6000
தனி இதழ்க் கட்டணம்	ரூ. 10	

ஆசிரியர்

இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,

செயலாளர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்,

மதுரை.

பொருளடக்கம்

இயற்கைக் காட்சியும் இறைவன் மாட்சியும் !	புலவர் சி. பாண்டுரங்கன்	4
சங்க இலக்கியத்தில் செலவழுங்கலும் அதற்கான சூழலும்	கோ. இராஜலட்சுமி	18
அடைவு	ஆறுவிரல் ஐம்பொறி	24
பரிபாடலில் அறிவியல் சார்ந்த கருத்துகள்	முனைவர் மெ. மெய்யப்பன்	25
பாரதிதாசன் கவிதை மொழிபெயர்ப்பு ஒரு பார்வை	உமாதேவி அழகிரி	28
பதற்றம் !	கவிவேந்தர் கா. வேழவேந்தன்	39

இதழ் மணம்

அன்புடையீர்,

மதுரை நான்காம் தமிழ்ச் சங்க நிறுவனர் வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவர் அவர்களுடைய 103வது நினைவு அஞ்சலி வணக்கம்.

இயற்கைக் காட்சிகளில் மிளிரும் இறைவன் மாட்சியைப் புலவர் பாண்டுரங்கன் இவ்விதழில் அழகாக நிறைவு செய்துள்ளார்.

பிரிவும் பிரிவு நிமித்தமும் தொடர்பான பாடல்கள் நிறைந்துள்ள சங்க இலக்கியத்தில் அதன் ஒரு பகுதியாகிய செலவழுங்கலுக்கான சூழலை விளக்கத்துடன் ஆய்வாளர் கோ. இராஜலட்சுமி எடுத்துரைத்துள்ளார்.

இலக்கிய நூலுள் அமைந்துள்ள குறிப்பிட்டுள்ள பகுதிகளைத் தேடுவதற்குப் பயன்படும் அடைவின் தொகுப்பு, தற்காலத்தில் அருகி வருதலைச் சுட்டிக் காட்டுவதுடன், திருக்குறள் அடைவில் அமைந்துள்ள ஓர் எழுத்துக்கு ஒரு குறட்பா என்ற சிறப்பு நிலையை நுணுகி ஆராய்ந்து ஆறுவிரல் ஐம்பொறி அவர்கள் வெளிப்படுத்தியமை பாராட்டிற்குரியது.

பரிபாடலில் இடம் பெற்றுள்ள அறிவியல் சார்ந்த கருத்துகளை முனைவர் மெ. மெய்யப்பன் எளிமையாக அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் தம் கட்டுரையில் வெளிப்படுத்தியுள்ளார்.

ஒரு மொழியில் வெளிவந்த படைப்பை உலகெங்கும் பரவச் செய்வது மொழிபெயர்ப்புக் கலை. அதன் அடிப்படையில் பாரதிதாசன் கவிதை மொழி பெயர்ப்பை மொரீசியஸ் உமாதேவி அழகிரி அவர்கள் கட்டுரையாக வடித்து வழங்கியுள்ளமை பாராட்டிற்குரியது.

மனிதனைப் பண்படுத்தும் வகையில், பதற்றம் என்னும் தலைப்பில் கவிஞர் கா. வேழவேந்தன் அவர்கள் கவிதை படைத்துள்ளார். ஒருவரின் தவறான நடைமுறையாகத் திகழும் பதற்றமானது அவரைப் பாதிப்பதோடு மட்டுமல்லாமல் சமூகத்தையும் வாதிக்கும் தன்மையை அழகாகத் தன் கவிதையில் புலப்படுத்தியுள்ளமை போற்றுதற்குரியதாகும்.

2013, டிசம்பர் 15ஆம் நாளன்று மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தின் செந்தமிழ்க் கல்லூரியின் செயலாளரும், தமிழகத் தமிழ்ச்சங்கங்களின் கூட்டமைப்புத் தலைவருமான திருமிகு. கோச்சடை இரா. குருசாமி அவர்களின் மைந்தனின் திருமணவிழாவிற்கான வாழ்த்துப் பாவினை வித்துவான் குருசாமிதேசிகர் மகிழ்வுடன் வழங்கியுள்ளார்.

இலக்கியமும். இயற்கையும் இறைமையும் ஒன்றிக் கலந்திருப்பதனை இம்மாத இதழ் சிறப்புற வெளிக்காட்டியுள்ளது.

ஆசிரியர்

இயற்கைக் காட்சியும் இறைவன் மாட்சியும் !

(சென்ற இதழ் தொடர்ச்சி)

புலவர் சி. பாண்டுரங்கன்
ஆம்பூர்

பொன்விடியல்

அறியாமை உருவகமாய், அகிலத்தின் அற்புத புவிப்பந்தின் பாதியைக் கவ்வியிருந்த இருள், அறிவுச் சுடரின்நேர் ஒளிச்சுடரோன் வரவு கண்டு, மெல்ல விலகி, மேற்றிசை நோக்கி நகரத் தொடங்கியது. பொற்கோழிச் சேவல் கொண்டை நிமிர்ந்தசையக் கொக்கரித்தது. ஓவிய அரசர் இரவிவர்மாவின் தூரிகை நுனியில் காட்சிகள் தோற்றம் கொள்வதுபோல், காடும் மலையும் அருவியும் ஆறும் மானும் மயிலும் மாசிலா விண்ணும் வண்ணக் காட்சிகளாயின, விரிந்து மலர்ந்த கண்களுக்கு ! வண்ணமயில் ஊர்தி கொண்டோனின் கொடிச் சின்னமாகிய சேவற்கோழி, தன் தலைவனின் பெயரைச் சொல்லி மகிழ்ந்தது; அப்பெயரைக் கேட்டோர், பகைவரையும் மன்னித்துத் திருந்தி வாழும் வாய்ப்பாகிய கொடை நல்கும் குணம் கற்றுக் கிழக்கு வெளிச்சத்தை வரவு வைத்துப் பணிகளைத் தொடங்கித் தொடர்ந்தனர்; சேவல் கொக்கரித்த ஒலி **கொக்கறுக்கோ;** கொக்கு + அறு + கோ (கொக்கு = மாமரம்); அதைக் கேட்டவர்தம் மனத்தில், கரவு உள்ளத்தான் வடிவம் மாறி கரந்து நின்றாலும் கண்டுபிடித்து, தீமை சாய்த்து, அவனையே நன்மை சுமப்பவனாகவும் பிறரைக் காத்தலில் வெற்றி பெறுபவனாகவும் மாற்றிய கதை, விநாடிகளில் ஓடி, பிறர் நலம் என்றும் நாட மன உறுதியைத் தந்தது !

வைகறையின் வரவைச் சாத்தனார் இயம்பும் அழகே அழகு! மக்கள் துயில் எழக் காரிருளைக் கிழித்துக் கொண்டு பகலவன், கீழ்க்கடல் மேல் எழுந்தான்! அவ் வைகறையில், தூய மென்படுக்கையில் துயின்றோர் விழித்தனர்; வலம்புரிச் சங்குகள் முழங்கின; அவையில் ஆன்றோர் பொருளுரை முழங்கினர்; யானைகள் பிளிறின; கோழிச் சேவல்கள் கொக்கரித்தன; குதிரைகளின் கனைப்பும் பறவை மற்றும் வண்டு இனங்களின் ஒலியும் சேர்ந்து ஆரவாரம் மிகுந்தது!

மணிமேகலை; துயிலெழுப்பிய காதை பா அடிகள் :

"தூமென் சேக்கைத் துயில்கண் விழிப்ப,
வலம்புரிச் சங்கம் வறிதெழுந் தார்ப்ப,
புலம்புரிச் சங்கம் பொருளொடு முழங்க,
புகர்முக வாரணம் நெடுங்கூ விளிப்ப,
பொறிமயிர் வாரணம் குறுங்கூ விளிப்ப,
பணைநிலைப் புரவி பலவெழுந் தால,
பூம்பொழில் ஆர்கைப் புள்ளொலி சிறப்ப......
ஊர்துயில் எடுப்ப உரவுநீர் அழுவத்து,
காரிருள் சீத்து, கதிரவன் முளைத்தலும்....

பாரதியார்

"காலைப் பொழுதினிலே கண் விழித்து மேனிலைமேல்
மேலைச் சுடர்வானை நோக்கிநின்றோம் விண்ணகத்தே,
கீழ்த்திசையில் ஞாயிறுதான் கேடில் சுடர்விடுத்தான்,
பார்த்த வெளியெல்லாம் பகலொளியாய் மின்னிற்றே!"

"கடலின் மீது கதிர்களை வீசிக்
கடுகி வான்மிசை ஏறுதி ஐயா!
படரும் வானொளி யின்பத்தைக் கண்டு
பாட்டுப் பாடி மகிழ்வன புட்கள்!"

பாவேந்தர்

"அமைதியில் ஒளிஅரும்பும் அதிகாலை – மிக
அழகான இருட்சோலை தனில் (அமைதி...)
இமைதிறந்தே தலைவி கேட்டாள் – சேவல்
எழுந்திருப்பீர் என்று கூவல் (அமைதி....)
தமிழ்த்தேன் எழுந்தது வீட்டினர் மொழியெலாம்.... "

நாமக்கல் கவிஞர்

"கதிரொளி வந்தது
களிப்பினைத் தந்தது
மதிதெளி வுற்றது
மயக்கமும் அற்றது......."

"......... உடல் நல முறுவது கதிரொளி உறவால்
கடல்சலம் மழைதரல் கதிரொளித் திறமே
செடிகொடி மலர்எழில் கதிரொளிச் செயலே
கடவுளை உலகினில் காட்டுவ ததுவே !........"

நம்பிக்கை ஊட்டும் விடியல்கள்

திருப்பாவை

"புள்ளும் சிலம்பினகாண் ! புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ?
பிள்ளாய் ! எழுந்திராய் !.......
சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்துஉன்
பொற்றா மரையடியே போற்றும் பொருள்கேளாய் !..... "

– ஸ்ரீஆண்டாள்

திருப்பள்ளியெழுச்சி

"அருணன், இந் திரன்திசை அணுகினன்; இருள்போய்
அகன்றது; உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணை யின் சூரியன் எழஎழ, நயனக்
கடிமலர் மலர,..............."

"கூவின பூங்குயில்; கூவின கோழி;
குருகுகள் இயம்பின ; இயம்பின சங்கம் ;

ஓவின தாரகை ஒளி ; ஒளி உதயத்து

ஒருப்படு கின்றது; விருப்பொடு நமக்குத்

தேவ! நல் செறிகழல் தாள்இணை காட்டாய் ;

திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே !

திருவெம்பாவை

"அண்ணா மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்

விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்றாற்போல்

கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்

தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம் அகலப்

பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்

விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்

கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்

பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய் !"

– மாணிக்கவாசகர்

பானுவிற்குப் பாரதி வணக்கம்

....பரிதியே, பொருள் யாவிற்கும் முதலே,

பானுவே, பொன்செய் பேரொளித் திரளே

கருதி நின்னை வணங்கிட வந்தேன்;

கதிர்கொள் வாண்முகம் காட்டுதி சற்றே !

பாரதி நம்பிக்கை (ஆதித்தாய் தந்தை).....

கடலின் மீது கதிர்களை வீசிக்

கடுகி வான்மிசை ஏறுதி யையா....

காதல் கொண்டனை போலுமண் மீதே,

கண்பிறழ் வின்றி நோக்குகின் றாயே !

மாதர்ப் பூமியும் நின்மிசைக் காதல்

மண்டி னாள்இதில் ஐயமொன் றில்லை !

சோதி கண்டு முகத்தில் இவட்கே

தோன்று கின்ற புதுநகை யென்னே !

ஆதித் தாய்தந்தை நீவிர் உமக்கே

ஆயி ரம்தரம் அஞ்சலி செய்வேன் !

பாவேந்தர் பாவில் இயற்கை போற்றல்

விரிந்த வானே, வெளியே, – எங்கும்

விளைந்த பொருளின் முதலே,

திரிந்த காற்றும், புனலும், – மண்ணும்,

செந்தீ யாவும் தந்தோய்,

தெரிந்த கதிரும் நிலவும் – பலவாச்

செறிந்த உலகின் வித்தே,

புரிந்த உன்றன் செயல்கள் – எல்லாம்

புதுமை ! புதுமை ! புதுமை ! (1)

அசைவைச் செய்தாய், ஆங்கே – ஒலியாம்

அலையைச் செய்தாய் நீயே !

நசையால் காணும் வண்ணம் – நிலமே

நான்காய் விரியச் செய்தாய் !

பசையாம் பொருள்கள் செய்தாய் – இயலாம்

பைந்தமிழ் பேசச் செய்தாய் !

இசையாம் தமிழைத் தந்தாய் – பறவை,

ஏந்திழை இனிமைக் குரலால் ! (2)

எல்லாம் அசையச் செய்தாய் – உயிர்கள்

எதிலும் அசைவைச் சேர்த்தாய் !

சொல்லால் இசையால் இன்பம் – எமையே

துய்க்கச் செய்தாய் அடடா !

கல்லா மயில், வான்கோழி, – புறவுகள்
காட்டும் சுவைசேர் அசைவால்
அல்லல் விலக்கும் "ஆடற் – கலை" தான்
அமையச் செய்தாய் வாழி! (3)

புகார்ப்பெண்ணின் தோடுகள், மதியும் கதிரும்

முழுநிலா, கீழ்க்கடலில் தோன்றிமேலெழ,
மேல்திசையில் சாய்கதிரும் பொன்னொளி வீச,
இவ்விரு ஒளிரும் பொருள்களும் முறையே,
வெள்ளித் தோடு போலவும் பொன்தோடு
போலவும் புகார் நகரமாகிய பெண்ணுக்கு
அழகு செய்கின்றன! இம்மாவிரு தோடுகளைத் –
தம் கற்பனையால் அணிவித்து அழகு பார்த்து,
கனித்தமிழ்ப் பாவரியில் காட்டிப் படிப்பவரை
மகிழ்ச்சியில் ஆழ்த்துபவர் யார்? நூல் எது?
மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் :
மணிமேகலை (மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதை)
".....குணதிசை மருங்கின் நாள்முதிர் மதியமும்
குடதிசை மருங்கின் சென்றுவீழ் கதிரும்,
வெள்ளிவெண் தோட்டொடு பொற்றோ டாக
எள்ளறு திருமுகம் பொலியப் பெய்தலும்...."

இளங்கோவடிகள், சிந்தியல் வெண்பா வழிகாட்டும்
திங்களும் ஞாயிறும்

"திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
அங்கண் உலகளித்த லான்!

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு
மேரு வலம்திரித லான் !"

– சிலம்பு, புகார், ... வாழ்த்து........

அந்திப் பொழுது

"தேவி பராசக்தி யன்னை – விண்ணில்
செவ்வொளி காட்டிப் பிறைதலைக் கொண்டாள்....
செவ்வொளி வானில் மறைந்தே – இளம்
தேனில வெங்கும் பொழிந்தது கண்ணீர் !......

– பாரதியார்

வெண்ணிலா

"எல்லை யில்லாததோர் வானக் கடலிடை
வெண்ணிலாவே – விழிக்
கின்ப மளிப்பதோர் தீவென் றிலகுவை
வெண்ணிலாவே !.....
.... சீத மணிநெடு வானக் குளத்திடை
வெண்ணிலாவே – நீ
தேசு மிகுந்தவெண் தாமரை போன்றனை
வெண்ணிலாவே....."

– பாரதியார்

வெள்ளிக்குடத்தில் பால்சொரிதல், உவமை

"அந்தி மாலை நீங்கிய பின்னர்
வந்து தோன்றிய மலர்கதிர் மண்டிலம்.....

ஆசற விளங்கிய அந்தீந் தண்கதிர்,
வெள்ளிவெண் குடத்துப் பால்சொரி வதுபோல்,
கள்ளவிழ் பூம்பொழில் இடையிடைச் சொரிய....."

"தேன்சொரியும் மலர்வனத்தின் இடையிடையே,
வெள்ளிக் குடத்திலிருந்து பால்சொரிவது போல, அடர்
மரங்களினிடையே, நிலவொளி படர்ந்தது !"

இந்த மேலான கற்பனைக்குச் சொந்தக்காரர்,
மணிமேகலை நூலின் ஆசிரியர் !

வெள்ளி ஓடம்

"மீன்கள்கோடி கோடி சூழவெண்ணிலாவே ! – ஒரு
வெள்ளியோடம் போலவரும் வெண்ணிலாவே !"

"மீனினம் ஓடிப் பரக்குதம்மா, ஊடே
வெள்ளி ஓடமொன்று செல்லுதம்மா !" – கவிமணி

வான், மீன், கோள்

"சுயம்ஒளி விண்மீன்; எதிரொளி, கோள்கள் !
வயல்விரிந்த நெல்மணிநேர் வானில் – அயல்விரிந்த
விண்மீன் பகுதியாகும் பால்வீதி ! யார் உரைத்தார்
விண்எல்லை ஆய்ந்தே விளம்பு !" – சி.பா.

வானம் எளிய மனிதனால் அளவிடற்கரியதாய் விரிந்ததாம்; எண்ணற்கரிய விண்மீன்கள் (= சூரியன்கள்), அவற்றைச் சுற்றிச் சுழலும் கோள்கள் + துணைக் கோள்கள் உளவாம். வயல்ஏட்டில், பயிர்க் காவியம் படைக்கும் உழவர் பெருமக்கள், 'அப்பயிருக்கு ஆட்டுரம்; மறுபயிருக்கு மாட்டுரம்' எனத் தெளிந்து, அப்பயிர்க்கு வேண்டும் உடனுரம் பெற, (தொடிப்புழுதி கஃசா உணக்கிட இயலாச் சூழலில்) ஆட்டு மந்தைக்கிடை வைப்பர்; மேய்ச்சலுக்குச் சென்று வந்த ஆடுகளை உழவு நிலத்தில் இரவு தங்கச் செய்து, உரமேற்றுவர். அச்சமயம், இரவு கண் விழித்துக் காவல் புரிவோர், வானத்து நட்சத்திரங்கள் / கோள்கள் இருப்பும் போக்கும் அறிந்து, (இரவில்) திசையும் நேரமும் தெரிந்து கொள்கின்றனர் ! துருவமீன் வடதிசை காட்டும் ; கட்டில்கால், முள்கோல், நிலா, வெள்ளி, அவர்களுக்கு உதவி புரிவன. நான்கு நட்சத்திர (விண்மீன்) தொகுதிக்கு அவர்கள் வழங்கும் பெயர், **கட்டில் கால்,** மூன்று நட்சத்திரம் நேர்க்கோட்டில் அமைவதே முள்கோல். நேரம் கணக்கிட, **கோழியும் குஞ்சுகளும்** தொகுதியையும் கவனிப்பர்.

காரின்திரை விலகா நிலையில் என்ன செய்வர்? இயற்கைக் கடிகாரங்களான, தாமரை மலர்ச்சியால் காலை, முல்லை மலர்வதால் மாலை, சேவல் கொக்கரிப்பால் விடியல் என அறிவர் ! நீர்க்கடிகை / மணற்கடிகை / சூரியக் கடிகைக்கல் எல்லோர்க்கும் வாய்த்திடுமா என்ன? அறிவியல் கைகுலுக்காக் காலம், இயற்கைதான் உதவும் கரங்கள்!

திகட்டா தினிக்கும் திருப்பாவை வரிகள்

"…. வெள்ளி யெழுந்து வியாழம் உறங்கிற்று

புள்ளும் சிலம்பினகாண் போதரிக் கண்ணினாய்…."

"உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்

செங்கழுநீர் வாய்நெகிழ்ந்த தாம்பல்வாய் கூம்பினகாண்…"

வானத்தழகில் வசமான பாரதியார்

நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்
நேர்பட வைத்தாங்கே
குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு
கோலவெறி படைத்தோம்…..
தாரகை யென்ற மணித்திரள் யாவையும்
சார்ந்திடப் போமனமே !…..

நீலத் துகில்வான் அழகு

நீல உடையினைப் போர்த்தே – அங்கு
நின்றிருந் தாள்உயர் விண்ணாள் !
வாலிப வெண்மதி கண்டான் – முத்து
மாலையைக் கையி லிழுத்து
நாலு புறத்திலும் சிந்தி – ஒளி,
நட்சத் திரக்குப்பை யாக்கி….. – பாவேந்தர்

புவி, வான், கடல், கதிர், மீன், பால்நேர் ஒளிநிலா,
மூச்சுயிர், நற்றமிழ்நேர் மாண்பு ! – சி.பா.

ஐங்குறுநூறு காட்டும் ஐவகை நிலக்காட்சிகள்

1. குறிஞ்சி

மலைச் சாரலில் உள்ள பலா மரத்தின் கொழுவிய கொத்துக்களிடையே பழுத்த நல்ல பழம் பெரிய பிளப்பிலுள்ள பொந்தில் விழுந்ததாகப் பாறையில் கட்டப்பட்ட தேனடை அழிந்து தேன்சிந்தும் நாடு.....

"சாரல் பலவின் கொழுந்துணர் நறும்பழம்
இருங்கல் விடரளை வீழ்ந்தென, வெற்பில்
பெருந்தேன் இறாஅல் சிதறும் நாடன்...." – கபிலர்

2. முல்லை

காயா, கொன்றை, நெய்தல், முல்லை, செம்முல்லை, பிடவம் ஆகிய மலர்கள் விரிந்து, புறவு (முல்லை நிலம்), பூவணி கொள்ளலாகியது....

காயா கொன்றை நெய்தல் முல்லை
போதவிழ் தளவொடு பிடவலர்ந்து கவினிப்
பூவணி கொண்டன்றால் புறவே........... – ஐங்குறு. 412

3. மருதம்

உளை பொருந்திய பூக்களையுடைய மருத மரத்தில் குருகுப் பறவைகள் (கிளி மற்றும் அன்னம், நாரை, கொக்கு போன்ற நீர்வாழ்ப் பறவைகள்) தம் சுற்றம் சூழ வாழ்கின்ற குளிர்ந்த துறையை உடைய ஊர் (ஊரன்....)

வாழியாதன், வாழி அவினி.....
உளைப்பூ மருதத்துக் கிளைக்குருகு இருக்கும்
தண்டுறை ஊரன்..... – ஓரம்போகியார்

4. நெய்தல்

புன்னை மலரின் நுண்மையான துகள் படிந்து கிடக்கும் நெய்தல் மலர், பொன்னிடை வைத்த நீலமணி போல மிளிரும் மென்மையான கடற்கரை (யை உடையவன்).

"புன்னைத்தாது பொன்நிறமும் நெய்தல் நீல நிறமும் கொண்டதால்" இவ்வுவமை அற்புதம்!

"புன்னை நுண்தாது உறைத்தரு நெய்தல்
பொன்படு மணியின் பொற்பத் தோன்றும்
மெல்லம் (புலம்பு) புலம்பன்....." – அம்மூவனார்

5. பாலை

தலைவி ஒளிபொருந்திய நெற்றியை உடையவள். தலைவன் அவளைப் பிரிந்து வினைமேற்சென்ற வழி, கொடியதாக இருந்தது. நெடிது ஓங்கி வளர்ந்த மூங்கில்கள் உலரும் வண்ணம் கடுங்கோடை நிலவியது. ஞாயிற்றின் மிகு வெம்மைக் கதிர்களால் கற்கள் பிளவுபட்டன. (எனினும் தலைவியை நினைக்குந் தோறும் அவை குளிர்ந்தன)

"நெடுங்கழை முளிய வேனில் நீடிக்
கடுங்கதிர் ஞாயிறு கல்பகத் தெறுதலின்
வெய்ய ஆயின, முன்னே, (இனியே
ஒள்நுதல் அரிவையை உள்ளுதொறும்
தண்ணிய ஆயின, சுரத்திடை யாறே !)" – ஓதலாந்தையார்

ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் காணல் போல, ஐந்நில இயற்கைக் காட்சிகள் நிறைந்த ஐந்நூறு பாடல்கள் கொண்ட ஐங்குறுநூறு நூலிலிருந்து, ஐந்து பாடல் / அடிகள் மட்டுமே இங்கு கண்டோம். சங்க இலக்கியங்களில், வானத்தில் தோன்றும் நட்சத்திரங்களின் எண்ணிக்கை போல, இயற்கைக் காட்சிகள் மிகுந்துள !

இயற்கைக் காட்சியும் இறைவன் மாட்சியும்

மகாகவி பாரதியாரின் பக்திப் பாடல்களிலிருந்து, மேற்கோள் அடிகள்,

"யாதுமாய் விளங்கும் இயற்கைத் தெய்வமே !"

"பூதங்கள் ஐந்தி லிருந்தெங்கும் கண்ணில்
புலப்படும் சக்தியைப் போற்று கின்றோம் !"

"தஞ்சமுண்டு, சொன்னேன்,
செஞ்சுடர்த் தேவன் சேவடி நமக்கே !"

"நிழலினும் வெயிலினும் நேர்ந்தநற் றுணையாய்த்
தழலினும் புனலினும் அபாயம் தவிர்த்து
மண்ணினுங் காற்றினும் வானினு மெனக்குப்
பகைமையொன் றின்றிப் பயந்தவிர்த் தாள்வான்....."

"ஞாயி றென்ற கோளம் – தருமோர்
நல்ல பேரொளிக் கே
தேய மீதோ ருவமை – எவரே
தேடி யோத வல்லார் ?
வாயினிக்கு மம்மா – அழகாம்
மதியி னின்ப ஒளியை
நேயமோ டுரைத்தால் – ஆங்கே
நெஞ்சி ளக்க மெய்தும் !

"வெளியிலே பறவையிலே மரத்தினிலே
முகிலினிலே வரம்பில் வான
வெளியிலே கடலிடையே மண்ணகத்தே
வீதியிலே வீட்டிலெல்லாம்
களியிலே, கோவிந்தா நினைக்கண்டு
நின்னொடு நான்கலப்ப தென்றோ ?"

"பொன்னினும் மணிகளிலும் – நறும்
பூவிலும் சாந்திலும் விளக்கினிலும்
கன்னியர் நகைப் பினிலும் – செழுங்
காட்டிலும் கழனியிலும்
முன்னிய துணிவினிலும் – மன்னர்
முகத்திலும் வாழ்ந்திடும் திருமகளைப்

பன்னிநற் புகழ்பாடி – அவள்

பதமலர் வாழ்த்திநற் பதம்பெறுவோம்.

மண்ணினுட் கனிகளிலும் – மலை

வாய்ப்பிலும் வார்கட லாழத்திலும்

புண்ணிய வேள்வியிலும் – உயர்

புகழிலு மதியிலும் புதுமையிலும்

பண்ணுநற் பாவையிலும் – நல்ல

பாட்டிலுங் கூத்திலும் படத்தினிலும்

நண்ணிய தேவிதனை – எங்கள்

நாவிலும் மனத்திலும் நாட்டிடுவோம் !

இயற்கை, இறைஉருவக் காட்சிக்கு உவமையாதல்

(கடவுள் வாழ்த்து, குறுந்தொகை, பாரதம் பாடிய பெருந்தேவனார்)

"தாமரை புரையும் காமர் சேவடி,

பவழத்து அன்ன மேனி, திகழ்ஒளி,

குன்றி ஏய்க்கும் உடுக்கை, குன்றின்

நெஞ்சு பகஎறிந்த அம்சுடர் நெடுவேல்,

சேவல்அம் கொடியோன் காப்ப,

ஏமவைகல் எய்தின்றால் – உலகே."

பன்னிருதிருமுறை

"தெண்டிரை ஓங்கி ஓதம் சென்றடி வீழும் காலைத்

தொண்டிரைத் தண்டர் கோனைத் தொழுதடி வணங்கி....."

– திருநாவுக்கரசு தேவாரம் (திருவலம்புரம்)

"வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி

ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்

கோனாகி யான்எனதென் றவரவரைக் கூத்தாட்டு

வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே !"

– மாணிக்கவாசகர், திருவாசகம் (திருச்சதகம்)

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்

"வானாடும் மண்ணாடும் மற்றுள்ள பல்லுயிரும்,
தானாய எம்பெருமான்....." – பெரிய திருமொழி, நாலாம்பத்து
"மின்னுமாமழை தவழும் மேகவண்ணா!" – திருநெடுந்தாண்டகம்

"காரார் வரைக்கொங்கை, கண்ணார் கடலுடுக்கை,
சீரார் சுடர்ச்சுட்டிச் செங்கலுழிப் பேராற்று,
பேராரமார் வில் பெருமாமழைக் கூந்தல்,
நீரார வேலி நிலமங்கை....'' – சிறிய திருமடல்

"ஒன்றிச திங்களைக் காட்டியொளி மணிவண்ணனேயென்னும்
நின்ற குன்றத்தினை நோக்கி நெடுமாலே வாவென்றும் கூவும்,
நன்று பெய்யும் மழைகாணில் நாரணன் வந்தானென்றாலும்,
என்றினமையல்கள் செய்தாரென்னுடைக் கோமளத்தையே!"
– திருவாய்மொழி

இயற்கைக் காட்சியும் இறைவன் மாட்சியும் இவ்வாறும், மேலும் அழகு மிளிரப் பலவாறும், தமிழ் இலக்கியங்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ளதை, நுணுக்க மறிந்து பயில்வோமாக!

வாசகர் வாசகம் 1

செந் தமிழை வாழ்த்து!

பாவேந்தர் கவிப்புனைவின் மொழி பெயர்ப்பு
பனைமரத்துச் சிறப்புரைக்கும் பாட்டின் வார்ப்பு
மேவுமுயர் காரைக்கால் அம்மையார்தம்
மிடுக்குறுநல் அந்தாதி யில்சித் தாந்தம்
கூவுகுயில் மலைவளத்தை மணிமா றன்தான்
குறவஞ்சியில் பிழிந்தே ரசமாய்த்தந்தார்
நாவலராம் திருமூலர் செந்நாப் போதார்
நல்லன்பும் உணர்த்தும்செந் தமிழை வாழ்த்து!

இப்படிக்கு,
பாவலர் அறிவரசன், திருலோக்கி

சங்க இலக்கியத்தில் செலவழுங்கலும் அதற்கான சூழலும்

கோ. இராஜலட்சுமி
அண்ணாமலைநகர்

முன்னுரை

சங்க கால மக்களின் வாழ்க்கை முறையினைப் படம் பிடித்துக் காட்டும் கண்ணாடியாகச் சங்க இலக்கியம் விளங்குகின்றது. அத்தகைய இலக்கியங்களுள் பாலைத் திணைப் பாடல்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. பிரிதலும் பிரிதல் நிமித்தமும் என்ற உரிப்பொருளைக் கொண்டுள்ள பாலையில் தான் பிரிவு குறித்த செய்திகளும் மிகுதியாகக் காணப்படுகின்றன. அவ்வகையில் களவு, கற்பு என இருநிலையில் செலவு மேற்கொள்கிறான் தலைவன். களவில் ஒருவழித்தணத்தல், வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரிதல் ஆகிய இருநிலையும், கற்பில் ஓதல், பகை, தூது, காவல், பொருள், பரத்தமை போன்ற காரணங்களுக்காகவும் பிரிகிறான்; மேற்கண்ட காரணங்களுக்காகப் பிரிய நினைக்கிறான். தலைவியின் ஆற்றாமையைக் கண்டு சிறிது காலம் தன் செலவினைத் தவிர்க்கிறான் என்பது செலவழுங்கல் ஆகும். அத்தகைய செலவழுங்கல் குறித்தும் அழுங்கலுக்கான சூழல் குறித்தும் ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

செலவழுங்கல் - விளக்கம்

இயற்கைப் புணர்ச்சியில் ஊழ்வினை காரணமாகத் தலைவனும் தலைவியும் காதல் கொண்டு களவு வாழ்வு மேற்கொள்கின்றனர். பின்னர் பெற்றோர் சம்மதத்துடன் அல்லது உடன்போக்கு மேற்கொண்டு கற்பாகிய இல்லற வாழ்வில் உட்புகுகின்றனர்.

மேற்கண்ட இருநிலைகளிலும் தலைவன் தலைவியைப் பிரிந்து செலவு மேற்கொள்கிறான். அவ்வாறு மேற்கொள்ள நினைக்கும் தலைவனது செலவினைத் தோழி தடுத்தலும் உண்டு. அது செலவழுங்குவித்தல் ஆகும். தலைவியின் ஆற்றாமையைக் கண்டு தலைவன் சிறிது காலம் அதாவது தற்காலிகமாகத் தன் செலவினைத் தானே தவிர்க்கிறான். அது செலவழுங்கல் எனப்படும். (அழுங்கல் – தவிர்த்தல்) இதனை,

"செலவிடை அழுங்கல் செல்லாமையன்றே
வன்புறை குறித்த தவிர்ச்சியாகும்" (தொல்.பொருள். கற்பு. 44)

என்னும் நூற்பா வழியாகத் தற்காலிகமாகத் தன் செலவினைத் தள்ளிவைக்கிறான். அவன் பிரிந்து போகாமல் இல்லை. தலைவியை ஆற்றுவிக்கும் பொருட்டு சிறிது காலம் செலவினைத் தவிர்த்தல் என்பது செலவு அழுங்கல் எனத் தொல்காப்பியர் கூறுகிறார். இவர் கூறும் கருத்தினை அடியொற்றியே உரையாசிரியர்களும், ஆய்வாளர்களும் மற்ற இலக்கணிகளும் கூறுகின்றனர்.

சங்க இலக்கியத்தில் செலவழுங்கல்

சங்க இலக்கியத்தில் செலவழுங்கல் குறித்த அகத்துறைச் சார்ந்த பாடல்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. களவுக் காலத்திலும், கற்புக் காலத்திலும் தலைவனும் தலைவியும் எப்போதும் இணைந்தே இருப்பதில்லை. சிலகாலம் பிரிந்திருத்தலும் உண்டு. அவ்வாறு களவுக் காலத்தில் வரைவிடை வைத்துப் பொருள் வயின் பிரிவில் செலவழுங்கல் இடம் பெறுவதில்லை. காரணம் பொருள் ஈட்டிவந்த பின் திருமணம் நடைபெறும் ஆகையால் அந்தப் பிரிவுக்குத் தலைவி உடன்படுகிறாள். இங்கு செலவழுங்கல் இடம் பெறுவதில்லை. அதற்கான சான்றுப் பாடல்களும் நமக்கு கிடைக்கவில்லை.

கற்புக் காலத்தில் தான் மிகுதியான இடங்களில் காணப்பெறுகிறது. ஓதல், பகை, தூது, காவல், பொருள், பரத்தை ஆகிய காரணங்களுக்காகத் தலைவன் பிரிந்து செல்கிறான். இதனை அறிந்து தலைவி மிகுந்த ஆற்றாமைக்கு உட்படுகிறாள். தலைவன் மீது அன்பு கொண்ட தலைவியைப் பிரிந்தால் அவள் இறந்துபடுவாள். ஆகையால் சிறிது காலம் செலவு மேற்கொள்ளாமல் காலம் தாழ்த்துகிறான். அதுவும் ஓதல், பகை, தூது, காவல் ஆகிய பிரிவுகள் தவிர்க்க முடியாத பிரிவுகள் ஆகையால் இவ்வகைப் பிரிவில் தலைவன் செலவழுங்கியதற்கான சான்றுகள் நமக்கு இல்லை. இவ்வகை செலவினை மேற்கொண்டு, சென்ற காரணங்களில் வெற்றி பெற்று மீளும் தலைவன், தலைவியின் அன்பை நினைத்து வருந்துகிறான். விரைவாகத் தேரைச் செலுத்தும்படி தேர்ப் பாகனிடம் கூறும் பாடல்கள் தான் சங்க இலக்கியத்தில் காணப்பெறுகின்றன.

காரணம் மேற்கண்ட நான்கு பிரிவு தவிர்க்க முடியாதது. அச்செலவினைத் தள்ளிப்போடவும் முடியாது. தலைவியும் தன்னை ஆற்றிக் கொள்வாள். நாட்டினைக் காத்தலும், மக்களை ஓம்புதலும் ஓர் ஆண்மகனின் கடமை ஆகையால் அத்தகைய செலவைத் தவிர்க்க முடியாது. அழுங்கல் துறை பொருள் வயின் காரணமான பிரிவில் தான் மிகுதியாக இடம் பெறுகின்றது.

செலவழுங்கலும் இடம் பெற்ற நூல்களும்

செலவழுங்கல் பாலைத் திணைப் பாடல்களில் தான் மிகுதியாக இடம் பெற்றுள்ளன. நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, ஐங்குறுநூறு, கலித்தொகை, பட்டினப்பாலை ஆகிய நூல்களில் செலவழுங்கல் பாடல் இடம் பெற்றுள்ளன.

நற்றிணை	-	16 பாடல்கள்
குறுந்தொகை	-	10 பாடல்கள்
அகநானூறு	-	50 பாடல்கள்
ஐங்குறுநூறு	-	20 பாடல்கள்
கலித்தொகை	-	3 பாடல்கள்
பட்டினப்பாலை	-	1 பாடல்

சங்க இலக்கியத்தில் மொத்தம் 100 பாடல்கள் செலவழுங்கல் பாடல்களாகும். இவற்றுள் பாலைத்திணைப் பாடல்களே அதிகம் இடம் பெற்றுள்ளன. அதிகமாக அகநானூற்றில் 50 பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

செலவழுங்கல் பாடிய புலவர்கள்

செலவழுங்கல் துறையினைப் பல்வேறு புலவர்கள் சிறப்பாகப் பாடியுள்ளனர். பெயர் தெரியாத புலவர்களும், பெயர் தெரிந்த புலவர்களும் பாடியுள்ளனர். பாலை பாடிய பெருங்கடுங்கோ, எயினந்தை மகனார் இளங்கீரனார், மருதனிள நாகனார், பெருந்தேவனார், உலோச்சனார், குடவாயிற் கீரத்தனார், அம்மூவனார், கல்லாடனார், நக்கீரனார், பெருந்தலைச் சாத்தனார் ஆகிய புலவர்கள் குறிப்பிடத்தக்கப் பாடலைப் பாடியுள்ளனர். இத்துறை பாலைத் திணையிலும் முல்லைத் திணையிலும் மிகுந்து காணப்படுகிறது.

செலவழுங்கலும் அதற்கான காரணமும்

தலைவனுக்காக வகுக்கப்பட்ட புறக்கடமைகளைச் செய்வதற்குப் பொருள் இன்றியமையாததாகிறது. அத்தகைய பொருள் வயின் காரணமாகப் பிரிந்து செல்கிறான். பெருமையும், வலிமையும் தலைவனுக்குண்டான பண்புகள் என்பர் தொல்காப்பியர். இதனை,

"பெருமையும் உரனும் ஆடூஉ மேன"

எனும் நூற்பா வழியாகத் தலைவனின் பண்புகள் தெளிவாகிறது. மேலும் குறுந்தொகைப் பாடலொன்று தலைவனுக்குரிய கடமைகளைக் கூறுகிறது. இதனை,

"வினையே ஆடவர்க்கு உயிரே வாணுதல்
மனையுறை மகளிர்க்குஆடவர் உயிரே" - குறுந்.பா.63

எனச் சங்கப் பாடலொன்று தலைவன் என்பவனுக்கு வினையே உயிர் என்றும் மனையுறை மகளிருக்கு ஆடவர் உயிர் என்றும் கூறுகிறது. பாலைத் திணையில் பொருளுக்காகப் பிரிகின்ற தலைவனுடைய பிரிவினைத் தலைவி, தோழி உணர்கின்றனர். இந்த நிலையில் தலைவனின் செலவு தடுக்கப்படுதலும் உண்டு; அதனைச் செலவு அழுங்குவித்தல் என்பர். தலைவன் தன் செலவினை தானே தவிர்த்தலும் உண்டு இது செலவழுங்கல் எனப்படும். இதேபோல் போருக்காகவும், பகை, தூதிற்காகவும் பிரிதலும் உண்டு. மேலும் பரத்தைக் காரணமாக மருதத் திணையிலும், போருக்காகவும் தூதிற்காகவும் முல்லைத் திணையிலும் பிரிகிறான்.

ஓதல், பகை, தூது, காவல், பரத்தைப் பிரிவுகளில் ஓதற்பிரிவுக்கான சான்று சங்க இலக்கியத்தில் இல்லை. தலைவன் பிரிவில் தலைவியுடைய உடல் அழிவு, மன அழிவு ஆகியன கூறப்படுகின்றன.

தன் பிரிவால் தலைவி வருந்தும் நிலையை நினைத்தும், முன்னர் தலைவியுடன் அனுபவித்த இன்ப நிலையை நினைத்தும் இப்போதுள்ள துன்ப நிலையை நினைத்தும், செலவு அழுங்குகிறான் தலைவன். இதனை,

"பாவை மாய்த்த பனிநீர் நோக்கமொடு,
ஆகத்து ஒடுக்கிய புதல்வன் புன் தலைத்

தூ நீர் பயந்த துணை அமை பிணையல்
மோயினள் உயிர்த்த காலை, மா மலர்
மணி உரு இருந்த அணி அழி தோற்றம்
கண்டே கடிந்தனம் செலவே - ஒண்டொடி
பிழையவள் மாதோ, பிரிதும் நாம் எனினே" (அகம். பா. 5)

என்ற பாடல் வழி தலைவியின் ஆற்றாமையைக் கண்டு தன் நெஞ்சிற்குக் கூறி செலவழுங்குகிறான். மேலும் பட்டினப் பாலையிலும் முட்டாச் சிறப்பினையுடைய பட்டினத்தையே கொடுத்தாலும் நான் தலைவியை விட்டுப் பிரிய மாட்டேன் எனச் செலவழுங்குகிறான். இதனை,

"முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை யொழிய
வாரேன் வாழிய நெஞ்சே" (பட்டினப்பாலை : 218-220)

என்ற பாடலில் தலைவன் தலைவியின் ஆற்றாமையையும், அவள் மீது வைத்த அன்பும் தெளிவாகிறது. மேலும் இத்தகைய காரணங்களைக் கூறிச் செலவழுங்குகிறான்.

செலவழுங்கலும் அதற்கான சூழலும்

தலைவன் கீழ் வரும் சூழல்களினால் தன் செலவினைத் தற்காலிகமாகத் தவிர்க்கிறான். அவை :

1. பொருள் கடைக்கூட்டிய தன் நெஞ்சிற்குக் கூறிச் செலவழுங்கியது.
   கலித். 16, அகம் 5
2. தலைவியின் ஆற்றாமையைக் கண்டு செலவழுங்கியது.
   குறுந். 135, 135, நற். 256
3. இடைச்சுரம், பாலையின் வெம்மை கூறிச் செலவழுங்கியது.
   அகம். 291
4. இடைச்சுரத்தில் தன் நெஞ்சிற்குக் கூறிச் செலவழுங்கியது.
   கலித். 3
5. முன்னொரு காலத்துப் பொருள் வயின் பிரிந்து, மீண்டும் பொருளீட்ட நினைக்கும் நெஞ்சிற்குக் கூறிச் செலவழுங்கியது.
   அகம். 379, 337

மேற்கண்ட சூழலில் தலைவன் செலவழுங்குகிறான் என்பது தெளிவாகிறது.

முடிவுரை

செலவு மேற்கொள்ளல் களவு, கற்பு ஆகிய இருநிலையில் நிகழும். களவில் செலவழுங்குவது இல்லை, கற்பில் தான் மிகுதியாகச் செலவழுங்குகிறான். செலவழுங்குதல் என்பது அவன் தற்காலிகமாகத் தன் பிரிவைத் தள்ளி வைக்கிறானே தவிர, அவன் பிரியாமல் இருப்பதில்லை. பின்னர் பிரிந்து செல்வான் என்பது புலனாகிறது. செலவழுங்களுக்கான காரணமாகத் தலைவியின் உடல் அழிவு, உள்ளத்தழிவு, ஆற்றாமை, துன்பம் ஆகியன. செலவழுங்கல் பாலைத்திணையிலும், முல்லைத் திணையிலும் மிகுதியாக இடம் பெற்றுள்ளது. சங்க இலக்கியத்தில் செலவழுங்கல் பாடல்கள் மொத்தம் 100 பாடல்கள் உள்ளன. ஐந்து சூழல்களின் அடிப்படையில் செலவழுங்கிறான் தலைவன். காலம் தாழ்த்தி பின்னர் பிரிந்து செல்வான் என்பதும், பொருளின் முக்கியத்துவமும் இக்கட்டுரையில் தெளிவாகிறது.

வாசகர் வாசகம் (2)

பேரன்புசால் செந்தமிழ் ஆசிரியர் அய்யா அவர்களுக்கு வணக்கம்.

கிரேக்க நாட்டில் வாழ்ந்த சாக்ரடீஸ் நஞ்சுண்டதன் தாக்கம் திருக்குறளில் பிரதிபலிப்பதையும் சிவபெருமான் நஞ்சுண்ட புராணச் செய்தி இலக்கியங்களில் பளிச்சிடுவதையும் குருசாமி தேசிகர் நன்கு விளக்கியிருந்தார்.

தொல்காப்பிய இலக்கண மெய்ப்பாடுகள் பற்றி திருக்குறளில் செய்திகள் வழிந்தோடுவதை ஐம்பொறியார் சுட்டிக் காட்டி எண் வகை மெய்ப்பாடுகளை முன்னிறுத்தி கவிஞர்கள் பாடல் இயற்றினால் சிறப்பு என்றும் பணித்திருந்தார்.

தமிழிலக்கியங்களான புறநானூறு, கம்பராமாயணம், மணிமேகலை, சிலப்பதிகாரம், வெற்றிவேற்கை, திருக்குறள் போன்ற நூல்களில் அறம் செய்தலின் அவசியம் வலியுறுத்தப்பட்டிருப்பதை இராசசேகரன் தொகுத்திருந்தார். மழை, அருவி, சிற்றோடை, ஆறு, கடல், தென்றல் போன்ற இயற்கைக் காட்சிகளை நம் கவிஞர்கள் பலபட வர்ணித்து வழங்கியிருந்ததை முன்னிறுத்தி அப்பாடல்களில் இறைவனின் மாட்சி பளிச்சிடுவதாகப் பாண்டுரங்கனார் அழகுற எழுத்துப் பின்னலிட்டிருந்தார்.

இப்படிக்கு,
புலவர் ந. ஞானசேகரன், திருலோக்கி

அடைவு

ஆறுவிரல் ஐம்பொறி
வீரசோழபுரம்

அடைவு என்ற சொல்லுக்கு எல்லாம் என்ற பொருளுண்டு. ஓர் இலக்கியத்தின் எல்லாப் பாடல்களின் முதற்குறிப்பு அடங்கிய பகுதியைப் பாட்டு முதற்குறிப்பு அடைவு என்று கூறுவர். எல்லாப் பாடல்களின் இறுதிச் சொல் அடங்கிய பகுதியைக் கடைச்சொல் அடைவு என்று கூறுவர். உழைப்பின்மையால் இக்கடைச்சொல் அடைவு அருகி வருகிறது. இவ்வடைவுகள் அகர முதலி நிரலில் அமைவதாலும் பக்கங்கள் குறிக்கப்படுவதாலும் ஒரு குறிப்பிட்ட பாடலை விரைந்து கண்டுபிடிக்க இயலுகிறது. திருக்குறளில் உள்ள பாட்டு முதற் குறிப்பு அடைவில் கோ, ஞா, தோ, நூ, பீ, போ, மை, மோ, வை ஆகிய ஒன்பது எழுத்துக்களில் உள்ள சிறப்பைக் காண்போம். இவ்வொன்பது எழுத்துக்களில் தொடங்கும் குறட்பாக்கள், ஓர் எழுத்துக்கு ஒரு குறட்பா என்ற அடிப்படையில், ஒன்பது எழுத்துகளுக்கு ஒன்பது குறட்பாக்கள் மட்டுமே திருக்குறளில் அமைந்துள்ளன. அவற்றைக் குறள் எண்ணுடன் காண்மின்.

1. கோட்டுப்பூச் சூடினும் - 1313
2. ஞாலங் கருதினும் - 984
3. தோன்றிற் புகழொடு - 236
4. நூலாருள் நூல் - 683
5. பீலிபெய் சாகாடும் - 475
6. போற்றின் அரியவை - 693
7. மையல் ஒருவன் - 638
8. மோப்பக் குழையும் - 90
9. வைத்தான்வாய் சான்ற - 1001

இவ்வொன்பது எழுத்துக்களில் மற்றுமொரு சிறப்பும் உள்ளது. அஃது, இவ்வொன்பது குறட்பாக்களின் முதலெழுத்துக்கள் உயிர்மெய் நெடிலாக அமைந்திருப்பதே. திருக்குறளில் பாட்டு முதற் குறிப்பு அடைவில் உள்ள இதுபோன்ற பல சிறப்புக்களைக் கண்டு கண்டு மகிழலாம்.

கற்போர் காலத்தை வீணாக்காமல் பாடல்களை விரைவில் கண்டுபிடிக்க வேண்டும் என்ற சீரிய நோக்கத்திற்காகவே நமது முன்னோர் பக்கங்கள் குறிக்கப்பட்ட முதற் குறிப்பு அடைவையும் கடைச்சொல் அடைவையும் தோற்றுவித்தனர். காலம் பொன் போன்றது என்பதைச் சொல்லியது மட்டுமல்லாமல் காலத்தைச் சேர்த்து வைத்து பயன்படுத்தும் வழிகளையும் காட்டியுள்ளனர். இதனை உன்னி உன்னி மகிழலாம்.

பரிபாடலில் அறிவியல் சார்ந்த கருத்துகள்

முனைவர் மெ. மெய்யப்பன்

இப்பிரபஞ்சத்திலுள்ள அனைத்தையும் ஒரு சேர இயக்கும் சக்தி இறைவனிடத்தில் மட்டுந்தான் இருக்கிறது. எது, முதல் எது? முடிவு எது? என்று கூறமுடியாதோ அதுவே கடவுள், அது இயற்கையைத் தவிர வேறு எதுவாகவும் இருக்க முடியாது என்ற கொள்கையில் கொண்டுள்ள நம்பிக்கையால் இறைவன் என்பதைப் பொதுவாகத் தமிழர்கள் இயற்கை என்று கூறுவார்கள். இறைவன் என்றாலும் இயற்கை என்றாலும் ஒன்றுதான், ஏனெனில் இறைவனையும் இயற்கையையும் வேறுபடுத்திப் பார்க்க முடியாத அளவிற்கு அனேக ஒற்றுமைகள் இருக்கின்றன.

இறைவனும் இயற்கையும்

இறைவனே இயற்கை; இயற்கையே இறைவன் என்ற கருத்து பரிபாடலில் வரும் திருமால் வாழ்த்து பற்றிய முதல் பாடலில் கூறப்பட்டுள்ளது. மன்னுயிர் முதல்வன் என்ற சொற்றொடர், அனைத்தையும் படைப்பதால் தோன்றச் செய்தும், காப்பதால் வாழச் செய்தும், அழிப்பதால் மறையச் செய்தும் பிரபஞ்சத்திலுள்ள அனைத்திற்கும் ஆதிமூலமாக விளங்கும் இறைவனை இயற்கையென வர்ணிக்கின்றது.

வெளியின்றி பொருட்கள் இருக்க முடியாது. பொருட்கள் தோன்றியிருக்க வெளி வேண்டும். எனவே பிரபஞ்சத்தில் விண்மீன்களும், கோள்களும் தோன்றி இருப்பதற்கு முன்னரே ஆகாயம் என்ற வெளி இருக்க வேண்டும். ஆகாயம் என்பது உருவமில்லாத ஒரு வெளி. அதற்கு எல்லையில்லை. பொருட்கள் தோன்றுவதற்கு முன்பே வெளி உண்டாகியிருக்க வேண்டும் என்ற கருத்தை ஆகாய ஊழியே முதல் தனிமம் (பூதமாக) எனக் குறிப்பிடும் பரிபாடலின் இரண்டாவது பாடல் அடிகளால் அறியலாம். பெரு வெடிப்புக் கொள்கை (Big Bang Theory) யில் பெரு வெடிப்புக்கு முன்பு பிரபஞ்சத்தின் நிலைபற்றி ஏதும் தெரிவிக்கவில்லை. ஆனால் இரண்டாம் பரிபாடல் அடிகள் பிரபஞ்சம் தோன்றி உருவாவதற்கு முன்பு இருந்த பிரபஞ்சத்தின் நிலை பற்றியும் குறிப்புணர்த்துகின்றது.

பிரபஞ்சத்தின் பிறப்பு, பிரபஞ்சத்தின் அழிவிலிருந்து தொடங்குகின்றது என்ற அறிவியல் கருத்தை இப்பாடல் அடிகள் தெளிவாக எடுத்துரைக்கின்றன. உயிரினங்களின் பிறப்பு என்பது அவற்றின் இறப்பிலிருந்தே தொடங்குகின்றது என்ற அனுபவ அறிவே பரிபாடலின் இவ்வடிகளுக்கு ஆதாரமாக இருக்கலாம்.

சூரியனும் (விண்மீன்களும்), சந்திரனும் (கோள்களும்) அழிய பொருள் ஆற்றலானது அப்போது ஆகாயம் அழகிழந்தது என்று சொல்லப்பட்டுள்ளது. விண்மீன் அழிந்து ஒண்முகிற்படலமாவது (Nebula) இத்தகையதே என்று இன்றைக்கு விண்ணியற்பியலார் கண்டறிந்ததோடு இக்கருத்து ஒத்துப்போகிறது. அதன்பின் ஆற்றல், பொருட்களாக மாறி பிரபஞ்சமாக விரிவடைந்தது என்று ஊழிகளால் பிரபஞ்சத்தின் முழு வரலாற்றையும் கீரந்தையார்தான் தன் பாடலில் விவரிக்கின்றார். பிரபஞ்சத்தின் அழிவும் தோற்றமும் ஆற்றல் – பொருள் இவைகளுக்கிடையே இடைவிடாது நடைபெறும் பரிமாற்று வினைகளால் விளங்கிக் கொள்ள முடியும். முழுமையாகப் பொருள் நிலையில் இருக்கும் போதும் அல்லது ஆற்றல் நிலையில் இருக்கும் போதும் பிரபஞ்சம் வெறும் வெற்று வெளியாக இருக்கும். இடைநிலையில் அவ்வெளி அண்டங்கள் அடங்கிய பிரபஞ்சமாக விளங்கும். பிரபஞ்சம் முழுப் பொருள் நிலைக்கும் (Big Bang) முழு ஆற்றல் நிலைக்கும் இடையில் தொடர்ந்து அலைந்து கொண்டிருப்பதால் அதன் அழிவும் பிறப்பும் மீண்டும் மீண்டும் தோன்றிக் கொண்டேயிருக்கின்றன.

அந்த வானத்தில் ஆற்றலிலிருந்து அணுக்கள் தோன்றி பொருட்களாய் வளர்ந்தன என்பதை, கருவளர் வானத்திசையில் தோன்றி என்ற அடிகளால் குறிப்பிட்டுள்ளார். வெப்பச் சலனத்தால் இயங்கிச் செல்லும் அணுக்களையே இவர் ஊழிக்காற்றெனக்;குறிப்பிட்டுள்ளார். ஆகாயத்தில் உயிரில்லா அணுக்களை இடப்பெயர்த்து செலுத்தக் கூடிய காற்று அடுத்த ஊழியாகத் தோன்றியது. இதனால் அண்டங்கள் அங்குமிங்குமாக எங்கும் தோன்றக் காரணமான நெருப்பும், நீரும், அதனின்று நிலமும் முறையே தோன்றின. பிரபஞ்சத்தின் வளர்ச்சிப் படிகளை எடுத்துரைக்கும் இப்பாடல் அதன் அழிவின் நிலைகளுக்கும் விளக்கத்தை உள்ளடக்கி வைத்திருக்கின்றது. நிலம் நீரில் மூழ்கும் என்றும் நீர் நெருப்பில் ஒடுங்கும் என்றும் அழிவின் முறைமையைக் கூறுகின்றது. வெப்பத்தின் அதிகரிப்பால் துருவப் பகுதிகளிலுள்ள பனிப்பாறைகள் உருக, கடல் நீர் மட்டம் உயர, தாழ்ந்த நிலப் பகுதிகள் மூழ்கடிக்கப்படுவதை இன்று நாம் காண்கிறோம். விண்மீன்களின் வளர்ச்சிப்படிகளில் ஏற்படும் மாற்றங்களினால் விளையும் உயர் வெப்ப நிலையால் நிலத்தை விழுங்கிய நீர் ஆவியாகி

மூலக்கூறுகளாகவும், அணுக்களாகவும், அடிப்படைத் துகள்களாகவும் மாறும். விண்வெளியில் காணப்படும் நீரில்லாக் கோள்கள் இந்த மாற்றத்தின் ஒரு கட்டமே. இதையே நெருப்பில் நீர் ஒடுங்கும் என்று குறிப்பிட்டிருப்பது போலத் தோன்றுகின்றது.

மறுபிறப்பு

உயிரினங்களுக்கு மறுபிறப்பு உண்டென உறுதிபட தெரிவிக்கின்றது பரிபாடலின் செவ்வேள் பற்றிய ஐந்தாம் பாடல்.

"மறுபிறப்பு இல்லெனும் மடவோரும் சேரார்."

உயிரினங்களின் பிறப்பும் இறப்பும் தொடர்ந்து நடைபெற வேண்டுமானால் அது தொடக்கமும் முடிவும் இல்லாத வட்டம் போல ஒரு வட்டச் சுற்று முறையில் நிகழ வேண்டும். இறப்பு என்பது உயிரியல் மூலக்கூறுகள் சாதாரண, உயிரியல் அல்லாத மூலக்கூறுகளாக நிலை மாறுவதாகும். பிறப்பு என்பது உயிரியல் அல்லாத மூலக்கூறுகள் உயிரியல் மூலக்கூறுகளாக நிலை மாற்றம் பெறுவதாகும். நிலை மாற்றம் என்பது அழிவில்லை. பிறப்பிற்குத் தேவையான உயிரியல் மூலக்கூறுகளை இறப்பினால் விளைந்த உயிரில்லா மூலக்கூறுகளிலிருந்தே இயற்கை தேர்வு செய்கிறது. இந்த அறிவியல் உண்மையை உணர்ந்தோரே மறுபிறப்பைப் பற்றிக் குழப்பமின்றிக் கூறமுடியும். மறுபிறப்பு இல்லையென வாதிடுவோர் அறிவிலாதார் என்று இகழ்கின்றார் பாடல் ஆசிரியர் கடுவன் இளவெயினனார்.

மழையின் மூலம்

அறிவியல் என்ற சொல்லும் சிந்தனையும் வளராத முற்காலத்திலேயே மழையின் மூலம் பற்றி வெகு அழகாகப் பரிபாடலின் சில பாடல் அடிகள் தெரிவிக்கின்றன. வையை பற்றிய ஆறாம் பாடலில் காணப்படும், 'நிறைகடல் முகந்துராய் நிறைந்துநீர் பார்வை துளும்புந்தம் பொறைதவிர் பசைவிடப் பொழிந்தன்று வானம்'. என்ற அடி, கடல் வற்றாத நீர்வளத்தைக் கொண்டுள்ளது என்றும் கடல் நீர் மேகமாகி வானிடம் எங்கணும் பரவிச் செல்வதால் மழை எங்கும் பொழிகிறது என்றும் தெரிவிக்கின்றது. வையை பற்றிய ஏழாம் பாடலின் தொடக்க அடியான,

"திரையிரும் பனிப்பௌவம் செவ்விதா அறமுகத்து"

என்பது ஏறக்குறைய இதே கருத்தை எடுத்தியம்புகின்றது.

பாரதிதாசன் கவிதை மொழிபெயர்ப்பு ஒரு பார்வை

உமாதேவி அழகிரி
மொரீசியஸ்

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர்களுள் ஒப்பற்ற சுடரொளியாய் மிளிர்ந்தவர் பாவேந்தர் பாரதிதாசன். அவர் மொழியுணர்வையும், சமூக விழிப்புணர்ச்சியையும் பகுத்தறிவுச் சிந்தனைகளையும் தம் பாடல்கள் வழி தமிழக மக்களுக்கு ஊட்டியவர். பாரதிக்கு வழித்தோன்றலாக விளங்கிய அவர் கவிதை, கதைப்பாடல், குறுங்காப்பியம், நாடகம், சிறுவர் இலக்கியம் போன்ற வடிவங்களைக் கொண்டு தம் செறிவுள்ள கருத்துக்களைச் செம்மாந்த நடையில் வெளிப்படுத்தியுள்ளார். சாதிமத ஒழிப்பு, வகுப்புரிமை பாதுகாப்பு, பொது உடைமை, ஆட்சி அமைப்பு, பெண்ணடிமை ஒழிப்பு, தமிழ் மொழி வளர்ச்சி, தமிழின வளர்ச்சி என்ற கொள்கைகளைக் குறையாத கவித்துவத்தோடு கவிதைகளை வழங்கியுள்ள போக்கு எடுத்தியம்புவது மிகவும் அவசியமானதாக இருந்தது. இதற்கு உறுதுணையாக விளங்குவது மொழி பெயர்ப்பு என்பதே ஆகும்.

மொழிபெயர்ப்பு - ஒரு விளக்கம்

மொழி, பெயர்ப்பு ஆகிய இரண்டு சொற்களின் இணைப்புதான் மொழிபெயர்ப்பு என்பது ஆகும். மொழிபெயர்ப்பு என்பது நுண்கலை. காலப்போக்கில் மொழிபெயர்ப்பு என்ற துறை வளர்ந்து தமிழ்மொழிக்குப் பெருந்துணையாக நிற்கிறது. மொழிபெயர்ப்பு என்பதற்கு அறிஞர்கள் பல்வகை விளக்கங்கள் தந்துள்ளனர். மொழிபெயர்ப்பு என்பது மொழியில் சொல்லப்படும் செய்திகளை மற்றொரு மொழிக்கு மாற்றியமைக்கும் அல்லது மற்றொரு மொழியில் எடுத்துச் சொல்லும் முறையாகும். தரும் மொழியிலுள்ள கருத்தையோ அல்லது செய்தியையோ பெறும் மொழிக்குப் பெயர்ப்பு செய்யும் பொழுது எந்த ஒரு மாற்றத்தையும் பெற்றிருத்தல் கூடாது. இவ்வாறு நிகழும் ஒரு பெயர்ப்பு நடவடிக்கையே மொழிபெயர்ப்பு ஆகும்.

மொழிபெயர்ப்பு - வரலாறு

தமிழ் மொழிபெயர்ப்பின் வரலாறு நோக்கும்போது தொல்காப்பியர் மொழிபெயர்த்து அதர்ப்பட யாத்தல் என்று குறிப்பிட்டுள்ளார். பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும் என்றும் அயலக இலக்கியங்களையும் இலக்கணங்களையும் அதன் சிறப்புகளையும் தமிழ் மொழியில் பெயர்க்க வேண்டும் என்றும் பாரதி அன்றே எதிர்காலத் தேவையைக் கருதிக் கூறியதோடு மட்டுமல்லாமல் தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும்வகை செய்திடல் வேண்டும் என்றும் தமிழ் மொழியிலுள்ள இலக்கண இலக்கியக் கலை மற்றும் பண்பாட்டுச் சிறப்புகளையெல்லாம் அயல்மொழியில் பெயர்த்து உலகிற்கெல்லாம் தமிழ்ச் சிறப்பு சென்றடைய வேண்டும் என்றும் பாரதி விரும்பியுள்ளார். அதற்கேற்றாற்போல தமிழ் இலக்கியங்கள் பல வேற்று மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன என்பது பாராட்டுக்குரியது.

பாரதிதாசன் கவிதை மொழிபெயர்ப்புகள் - ஓர் அறிமுகம்

பாரதிதாசன் நூற்றாண்டு விழாவையொட்டி தேர்ந்தெடுக்கப்பட்ட அவருடைய 100 கவிதைகளை ஆங்கிலத்திலும் திராவிட மொழிகளான கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளிலும் மொழி பெயர்க்கும் திட்டத்தை மேற்கொண்டது உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம். மொழி பெயர்க்கும் பணியைச் செய்துள்ள இந்நிறுவனம் போற்றுதற்குரியது. ஏனெனில் தாய் எழில் தமிழில் என்றன் தமிழரின் கவிதைகளை ஆயிரம் மொழிகளில் காண அவாவுற்றவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். தமிழ்மொழியின் சிறப்பை அயலவர் உணர மொழி பெயர்ப்பே சிறந்த சாதனம் என்பது பாரதிதாசனின் திண்ணமான கருத்து என்பதற்கு இப்பாடலே சான்றாக விளங்குகிறது.

பாரதிதாசன் நூற்றாண்டு விழாவுக்காகத் தென்னகப் பண்பாட்டு மையம் வழங்கிய தொகையின் ஒரு பகுதியை மதிப்பூதியமாக அளித்து, அந்தந்த மொழித் திறமையுள்ள அறிஞர் பெருமக்களாகிய வி. முருகன் (ஆங்கிலம்), முனைவர் பி. பத்மநாபன் தம்பியும் முனைவர் தேச மங்கலம் இராமகிருஷ்ணனும் (மலையாளம்), வி. பசுமலை அரசு (கன்னடம்), சி.ஆர். சேமா (தெலுங்கு) ஆகியோரைக் கொண்டு மொழி பெயர்ப்புப் பணி மேற்கொள்ளப்பட்டது.

செக் மொழியிலும், ரஷ்ய மொழியிலும் பாரதிதாசனின் சில கவிதைகள் மொழி பெயர்க்கப்பட்டு அந்நாட்டு இதழ்களை அலங்கரித்துள்ளன.

1990-இல் வெளிவந்த அ. தட்சிணாமூர்த்தியின் 'POEMS OF BHARATHIDASAN' என்ற நூலும் புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனமும், பாரதிதாசன் பல்கலைக்கழகமும் தனித்தனியே வெளியிட்ட பாரதிதாசனின் தேர்ந்தெடுத்த கவிதைத் தொகுப்பின் மொழிபெயர்ப்பும் குறிப்பிடத்தக்கன.

1996-இல் 'BHARATHIDASAN SELECTED POEMS' என்ற தலைப்பு கொண்டு புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் முயற்சி மேற்கொண்டது. முனைவர் ஆர். கணபதி, திரு. எம். லெனின் தங்கப்பா, முனைவர் ப. மருதநாயகம், முனைவர் கெ. செல்லப்பன், திரு. அ. தட்சிணாமூர்த்தி போன்றோர் இம்மொழிபெயர்ப்புப் பணியை வெற்றிக்கரமாக முடித்தனர்.

1999-இல் 'Selected Poems of Bharathidasan' என்ற தலைப்பிலான ஆங்கில மொழி பெயர்ப்பு நூலைப் பாரதிதாசன் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது. பாரதிதாசனின் கவித் திறனை அறியவும் வேற்று மொழிகளிலுள்ள கவிதைகளைப் பாரதிதாசன் படைப்புகளோடு ஒப்புநோக்கும் வாய்ப்பினை வழங்கவும் முதலிய நோக்கங்களுடன் பாரதிதாசன் பல்கலைக் கழகம் இவ்வுயரிய பணியை முடித்து வெளியிட்டது. இம்மொழி பெயர்ப்புப் பணியில் ஈடுபட்டோர் முனைவர் செ. செல்லப்பன், முனைவர் அ. தட்சிணாமூர்த்தி, எஸ். கிருஷ்ணமூர்த்தி, முனைவர் ப. மருதநாயகம், முனைவர் அ. அலிஸ், முனைவர் டி. அல்பட்டு முதலியோர் ஆவர்.

பாரதிக்குப் பிரேமா நந்தகுமார் போன்று பாரதிதாசனுக்கு எம்.எஸ். வெங்கடாசலம் அமைகிறார். அவர். பாரதிதாசனின் புரட்சிக்கவி, சஞ்சீவி பர்வதத்தின் சாரல், வீரத்தாய், தனிக் கவிதைகள் 20, 'Selected poems of Bharathidasan' உட்பட பாண்டியன் பரிசும் ஆங்கிலப்படுத்தியுள்ளார். பாரதிதாசனின் புகழ்பெற்ற கவிதைகள் 'POPULAR POEMS OF BHARATHIDASAN என்றுள்ள ஆங்கில மொழி பெயர்ப்புப் பனுவல் 1992-இல் பாரதிதாசன் பல்கலைக்கழகம் வெளியீடு ஆகும். பாண்டியன் பரிசு 'BARAHIDAS PANTIYAN PARISU' என்னும் ஆங்கில மொழி பெயர்ப்புத் தொகுப்பின் வெளியீடு ஆசியவியல் நிறுவனத்திற்குரியது.

'POEMS OF BHARATHIDASAN' (A Translation) என்பது முனைவர் அ. தட்சிணாமூர்த்தியின் மொழி பெயர்ப்பு நூல் ஆகும். புரட்சிக்கவி 'The Revolutinary Poet' மற்றும் சஞ்சீவி பர்வதத்தின் சாரல் 'The Canjeevi Range' ஆகிய இரு குறுங்காப்பியங்கள் கொண்டுள்ள ஆங்கில மொழிபெயர்ப்பு நூலை வெளியிட்டது வெற்றிச் செல்வி வெளியீட்டகம் என்பது ஆகும். இதன் பதிப்பு 1990.

அழகின் சிரிப்பு என்பதன் இணையான ஆங்கில மொழிபெயர்ப்பாகிய 'SMILE OF BEAUTY' பதிப்பித்தும் மொழி பெயர்த்துமாய் விளங்குபவர் முனைவர் ப. பரமேசுவரன் என்பவர் ஆவார். இது ஆசியாவியல் நிறுவனத்தால் 1997-இல் வெளியிடப்பட்டுள்ளது.

எம்.எஸ். வெங்கடாசலம் அவர்கள் அயல் மொழியான ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளவை குடும்ப விளக்கு, 'A LUMINOUS HOME, எதிர்பாராத முத்தம், That kiss most unexpected மற்றும் குடும்ப விளக்கும் இருண்ட வீடும் 'A LUMINOUS HOME AND A DISMAL HOUSE' என்பவை ஆகும். இவற்றை வெளியிட்டது பாரதிதாசன் பல்கலைக்கழகமே. இவை மட்டுமல்ல முனைவர் அ. தட்சிணாமூர்த்தி என்பவரால் ஆங்கில மொழியான வேற்று மொழியில் பெயர்த்து வழங்கிய காதலா கடமையா? 'LOVE OR DUTY' கடல் மேல் குமிழிகள்! 'THE BUBBLES ON THE SEA' மற்றும் தமிழச்சியின் கத்தி 'THE DAGGER OF A TAMIL WOMAN என்பனவற்றையும் வெளியிட்டுள்ள அரும்பணியை மேற்கொண்டதுபாராட்டுக்குரியது.

மொழிபெயர்ப்பு முறை

மொழிபெயர்ப்பு என்னும் முத்திரையைப் போட்டுக் கொள்ளாமலே எத்தனையோ தமிழ் இலக்கியங்கள், இலக்கண நூல்கள், வடமொழி, பாலி, பிராகிருதம், பிராமி மொழிகளிலிருந்து தமிழில் உருமாறி வந்துள்ளன என்பது தமிழ் இலக்கிய இலக்கண வரலாறு தெளிவாக உணர்த்தும் உண்மையாகும். காலப்போக்கில் மொழி பெயர்ப்புக்கென குறிப்பிட்ட வரையறைகளைப் பெற மொழி பெயர்ப்பாளர்கள் முயன்றுள்ளனர். இலக்கியங்கள், இலக்கியத் தொடர்பான ஆராய்ச்சிக் கட்டுரைகள், திறனாய்வுகள் போன்றனவும் அறிவியல், வரலாறு, அரசியல், சமூகவியல் போன்ற துறைநூல்களும் மொழிபெயர்க்கப்படும்போது ஒரே முறையைப் பின்பற்றி மொழிபெயர்க்கப்படுவதில்லை. அந்தந்தத் துறைகளின் தனித்தன்மைகளும் சிறப்பியல்புகளும் மொழிபெயர்ப்பில் பல்வேறு முறைகள் உண்டாகக் காரணியாக விளங்குகின்றன.

ஒரு மொழிபெயர்ப்பாளர், மொழி பெயர்க்கத் தேர்ந்தெடுத்துள்ள மூலநூலை நன்காராய்ந்து அதன் உள்ளீட்டை எந்த அணுகுமுறையில் பெயர்த்து வழங்குவது என்று தீர்மானித்துக் கொள்வது மொழிபெயர்ப்பு முறைகளாக அமைந்து வருதலைக் காணலாம். ஒரு மூலநூலை நேர் மொழிபெயர்ப்பாகவோ, கருத்து மொழிபெயர்ப்பாகவோ, தழுவலாகவோ, வேற்று முறையில் பெயர்க்கலாம். மூல மொழியில் உள்ளதைச் சிறிதும் மாறுபடாமல்' அவ்வாறே பெயர்த்து பெறும் மொழியில் வழங்குவது நேர் மொழிபெயர்ப்பு ஆகும். இதற்குச் சில சான்றுகள் நோக்கத்தகுந்தவை. எங்கெங்கும் காணினும் சக்தியடா 'Wherever you see is only Sakti, - அழகு - Beauty,, பெண்ணுக்கு நீதி - Justice for women, உலகம் உன்னுடையது - The World is yours', சுதந்திரம் - freedom - என்பவை இவ்வகையைச் சார்ந்தவை.

மொழியியல் அறிஞரான ரிச்சர்ட்டு பிரிஸ்லின் (Richard Brislin) துறைகளின் சிறப்பியல்புக்கு உரித்தான செய்திகளின் தன்மைகளைக் கொண்டு மொழிபெயர்ப்பு முறைகளை விளக்கியுள்ளார். அவை,

1. நடைமுறைப் பயன் நாட்டமுறை (Pragmatic Method)
2. கவிதை பெயர்ப்பு முறை (Aesthetic Method)
3. பண்பாட்டுப் பெயர்ப்பு முறை (Ethnographic Method)
4. மொழியியல் பெயர்ப்பு முறை (Linguistic Method)

என்பவையாகும்.

இந்நான்கினுள் கவிதைப் பெயர்ப்பு முறை என்பது கவினும், கவிதை நயமும், கலை நயமும் வாய்ந்த மொழி பெயர்ப்புகளுக்கு இம்முறை பயன்படுகிறது. மூலமொழி, கவிதை இயல்பை, பெயர்ப்பு, மொழி இயல்புக்கேற்ப பெயர்க்கப்படுவதில் இம்முறை பின்பற்றப்படுகிறது. இதற்கான சான்று,

சிறு குழந்தை விழியினிலே ஒளியாய் நின்றாள்;
திருவிளக்கில் சிரிக்கின்றாள்; நாரெடுத்து
நறுமலரைத் தொடுப்பாளின் விரல்வளைவில்
நாடகத்தைச் செய்கின்றாள்; அடடே செந்தோள்
புறத்தினிலே கலப்பையுடன் உழவன் செல்லும்
புதுநடையில் பூரித்தாள்; விளைந்த நன்செய்
நிறத்தினிலே என்விழியை நிறுத்தி னாளென்
நெஞ்சத்தில் குடியேறி மகிழ்ச்சி செய்தாள்

என்பது ஆகும். பாவேந்தர் பாரதிதாசன் அழகின் சிரிப்பில் இன்பம் கண்டார். அழகினைப் பெண்ணாகக் கண்டு இன்புறுகின்றார். இப்பகுதிக்கான ஆங்கில மொழி பெயர்ப்பு பின்வருமாறு அமைந்துள்ளது.

'She lingers as the light
In the lashes of a babe;
Smiles in the holy lamp,
Plays in the bend of
The lady's finger making
Garlands of flowers
Oh! Her sides swell with pride
In the majestic stride
Of the farmer carrying the
Plough on his sturdy shoulders
She transfixes my eyes
In the field golden with crops;
Her entry into my heart
Makes me ebullient with joy'

ஒவ்வொரு மொழிக்கும் ஒரு தனி நடை உண்டு. ஆதலால் மொழி பெயர்ப்பாளர் ஆங்கில மொழி நடையிலே மூலத்தில் உள்ள கவிதையின் நடை, செறிவான கருத்து, உணர்ச்சி முதலியவற்றைக் கொண்டு வர முயற்சி செய்துள்ளார்.

மொழியியல் பெயர்ப்பு முறைகளுள் ஒலி வடிவ மொழி பெயர்ப்பு (Transliteration) ஒன்று ஆகும். 'பாண்டியன் பரிசு' என்னும் குறுங்காப்பியத்தை ஆங்கிலத்தில் மொழி மாற்றம் செய்வதுடன் ஒலி வடிவ மொழிபெயர்ப்பு முறையையும் கையாண்டுள்ள பகுதி கீழ்க்கண்டவாறு,

'Cirmikundta katirnattin mele antat
Tiralmikundta velanattup pataikal
Portotukkap payntanaram katalaip pole

என்று வழங்கப்பட்டுள்ளது.

மொழியியல் அறிஞரான ஆண்ட்ரோ லெபிவெரே மொழி பெயர்ப்பு முறைகளை, வகைப்படுத்தி, நான்கு முறைகளைக் குறித்து விளக்கியுள்ளார். அம்முறைகளுள் கவிதையை உரைநடையாகக் மொழி பெயர்த்த பகுதி ஒன்று நோக்கத்தக்கது.

தண்ணீர் பற்பல, நிலங்கள் பற்பல
சாதிகள் கிடையாது,
பண்கள் பற்பல பாடல்கள் பற்பல
பகைத்தீ கிடையாது'

இப்பகுதிக்குரிய ஆங்கில மொழி பெயர்ப்பு பின்வருமாறு,

'Water goes into several kinds, so do the lands
And they know no distinctions of caste;
Melody branches into many, so do the strains
And do discord does mark them

என்று அமைந்துள்ளது. மூலத்திலுள்ள செறிவான கருத்து மொழி பெயர்ப்பில் சிறிது விரிந்துள்ளதைக் காணலாம்.

மொழி பெயர்ப்புக் காரணிகளான சொல், தொடர், அமைப்பு, வடிவம் இவற்றுக்குள் அடங்குகின்ற செய்திகளின் தன்மை ஆகியவற்றைப் பெயர்த்து அளிப்பதில் உள்ள கடினத் தன்மையே சிக்கல் என்று உணர்கிறோம். மொழி பெயர்ப்பைப் பரிசோதித்தல் (Laboratory Method of Translation) என்ற முறையில் மொழி பெயர்ப்பை ஆய்வு செய்த மொழியியல் அறிஞர்கள் இப்பொருள் குறித்துப் பல்வேறு கருத்துகளை வழங்கியுள்ளனர்.

மொழி பெயர்ப்பு என்ற செயல்பாடு மூலமொழிக்குரிய நிகரன்களைப் பெயர்ப்பு மொழியில் கண்டறிவதில்தான் அமைந்துள்ளது. மூலத்தின் பொருளைப் பெறும் மொழியில் தரும் விதத்தில் மூலத்தின் உருபன்கள், சொற்கள், தொடர்கள், வாக்கியங்கள் ஆகியவற்றைப் பதிலீடு செய்யக் கூடிய பெறும் மொழிக் கூறுகளை மொழி பெயர்ப்பு நிகரன்கள் (formal correspondents) ஆற்றல் மிகு நிகரன்கள் (dynamic equivalents) என்று இருவகையாக வகைப்படுத்தலாம் என மொழியியலார் கண்டறிந்துள்ளனர்.

பாரதிதாசன் கவிதை ஆங்கிலம் என்ற அயல் மொழி பெயர்ப்புகளில் சொல், தொடர், அமைப்பு முதலியவற்றின் அடிப்படையில் உள்ள வேறுபாடுகள் நோக்கற்பாலது. இதற்கு மானிட சக்தி என்னும் கவிதை சான்றாக எடுக்கப்பட்டுள்ளது.

மானிடன் வாழ்ந்த வரைக்கும் -- இந்த
வையத்திலே அவன் செய்தவரைக்கும்

மானிடத் தன்மைக்கு வேறாய் – ஒரு
வல்லமை கேட்டிருந்தால் அதைக் கூறாய்!
மானிட மென்பது புல்லோ ? – அன்றி
மரக்கட்டையைக் குறித்திடவந்த சொல்லோ!
கானிடை வாழ்ந்ததும் உண்டு – பின்பு
கடலை வசப்படச் செய்ததும் அதுதான்!

இப்பாடலின் ஆங்கில மொழி பெயர்ப்புகள் பின்வருமாறு தொகுக்கப்பட்டுள்ளன.

'Does the span of humankind
Or the record of one's accomplishments
Reveal a thing alternative
To the might of humanity O brother?
Is humanity just a blade of grass?
Or is it a word meant to denote a wooden log?
Mankind did live in the woods true
(But) it's humanity then that conquered the Oceans'

'Outside man's life here on this earth and all
The daring deeds done by him till now,
Have you heard of anything heroic, tell me,
Any force above the reach of man's might?
Would anyone say that man is slight as grass?
Or is man a word that means wood worthless?
Once his race lived in forests dark and deep
Later it could over seas claim control

Is humanity just a blade of grass?
Or a mere word that signifies a dead and insensate wood?
In the long annuals of human life and of human acts
Have you ever heard of a force greater than that of human kind?
Humanity might have sojourned once in the primitive wild;

But mankind has ever since
Tamed the wild billowing seas into the grasp and management'
மானிடன் வாழ்ந்த வரைக்கும் – இந்த
வையத்திலே அவன் செய்தவரைக்கும்

என்னும் தொடர்களின் மொழி பெயர்ப்புகளாவன,

'Does the span of humankind
Or the record of one's accomplishments' என்றும்,

'Ourside man's life here on this earth and all
The daring deeds done by him till now' என்றும்,

'In the long annuals of human life and of human acts' என்றும் அமைந்துள்ளன. இவற்றை நுணுகி ஆராய்ந்து பார்க்கும் போது முதல் மற்றும் இரண்டாம் மொழி பெயர்ப்புத் தொடர்கள் மூலத்தை ஒத்ததான கருத்து, தொடர் வரிசை ஆகியவற்றைக் கொண்டுள்ளன. மூன்றாம் மொழி பெயர்ப்பில் அவ்விரண்டு அடிகளின் செய்திகள் ஒரே தொடராய்ச் சுருக்கி அமைந்துள்ளன. சுருக்கமானாலும் அடிகளுக்கான செய்திகள் அதில் பிரதிபலிக்கின்றன. ஆங்கில மொழி கவிதை நடையைக் கொண்டு வர விழைந்ததுடன் மூலத்து முதல் அடியை மூன்றாம் அடியாக அமைத்துள்ளார் மொழி பெயர்ப்பாளர்;

மானிடத் தன்மைக்கு வேறாய் – ஒரு
வல்லமை கேட்டிருந்தால் அதைக் கூறாய் ! என்பவற்றின் வேற்று மொழி மாற்றங்கள் பின்வருமாறு அமைந்துள்ளன.

'Reveal a thing alternative
To the might of humanity O brother? எனவும்,

'Have you ever heard of anything heroic, tell me,
Any force above the reach of man's might? எனவும்,

'Have you ever heard of a force greater than that of human kind? எனவும் அமைந்துள்ளன.

'Force' என்பது வல்லமைக்கு அளித்துள்ள நிகரன்; அதைக் கூறாய் என்று விளித்துக் கூறுவது போல் 'O brother' மற்றும் 'tell me' என்று இரண்டு மொழி பெயர்ப்புகளாக அமைந்துள்ளன. முதல் மொழி பெயர்ப்புத் தொடர்

வாசகருக்கு ஒரு சவால் கேட்பது போல் விளக்குகிறது.

மானிட மென்பது புல்லோ? – அன்றி

மரக்கட்டையைக் குறித் திடவந்த சொல்லோ !

என்பதன் இணையான மொழி பெயர்ப்புகள் நோக்கத்தக்கவை.

'Is humanity just a blade of grass?

Or is it a word meant to denote a wooden long என்றும்

'Would anyone say that man is slight as grass !

Or is man a word that means wood worthless? என்றும்

'Is humanity just a blade of grass?

Or a mere word that signifies a dead and insensate wood? என்றும் உள்ளது. புல்லோ ? – அன்றி 'a blade of grass' என்றும் 'slight as grass' என்றும் மொழி பெயர்த்துள்ளது. மரக்கட்டை, 'wooden long' எனவும் 'wood worthless' எனவும் 'dead and insensate' எனவும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. 'Worthless' என்பது மதிப்பற்ற என்றும் insensate என்பது உணர்ச்சியற்ற என்றும் பொருள்படும். மூன்று மொழி பெயர்ப்புகளும் நேர்த்தியாக அமைந்துள்ளன.

கானிடை வாழ்ந்ததும் உண்டு – பின்பு

கடலை வசப்படச் செய்ததும் அதுதான் ! – என்பதற்கு

'Mankind did live in the woods true

(But) it's humanity then that conquered the Oceans"

"Once his race lived in forests dark and deep

Later it could over seas claim control"

Humanity might have sojourned once in the primitive wild;

But mankind has ever since

Tamed the wild billowing seas into the grasp and management என்பன மொழி பெயர்ப்புகள் ஆகும்.

கானிடை என்னும் சொல்லுக்குத் தந்துள்ள இணையான நிகரன்கள் 'woods, forests dark, மற்றும் 'the primitive wild' என்பவை ஆகும். இரண்டாம்

மொழி பெயர்ப்பில் மொழி பெயர்ப்பாளர் பெயரடைகளைப் பயன்படுத்தி விளக்கம் தந்துள்ளார். மூன்றாவது பண்டைக்கால மனிதனை மனத்தில் இருத்தி நிகரன்கள் அளித்துள்ளார். மூன்றாம் மொழி பெயர்ப்பில் கடலை வசப்பட என்னும் தொடருக்கு 'tamed and wild billowing seas into its grasp and management' என்று வந்ததால் மனிதனின் வீரத்தையும் வெற்றியையும் எடுத்தியம்புவது போல் இணையான நிகரனைத் தெரிவு செய்து விரிவான தொடராய் விளங்குகிறது. ஒரு பகுதியை மூலமொழியிலிருந்து பெறும் மொழிக்கு மொழி பெயர்ப்பு செய்யும் போது பல மாற்றங்கள் நிகழ்கின்றன. வாக்கியங்களில் ஏற்படும் மாற்றங்களில் பொருள் சிதைய வாய்ப்புண்டு. அதோடு தொடர் சீராக அமையவில்லை. ஆதலால் பொருளை உணர்த்தும் உரைமைத் தன்மை கெட்டுவிடும். தமிழின் மொழி அமைப்பும் ஆங்கிலத்தின் மொழி அமைப்பும் வெவ்வேறாக இருப்பதால், மொழி மாற்றம் நிகழும் போது அதனால் விளையும் இடர்ப்பாடுகளைத் தவிர்க்க இயலாது.

முடிவுரை

மொழி பெயர்க்கும் போது மொழி பெயர்ப்பாளர் தரும் மொழியிலுள்ள கருத்தைக் கூட்டியோ, குறைத்தோ, அல்லது செய்தியை நீக்கியோ பெறும் மொழிக்குப் பெயர்ப்பதைக் காணலாம். சில வேளைகளில் பொருத்தமான நிகரன்கள் கிடைக்காதபோதும் நிகரனாகும் தகுதியுடைய சொல்லின் உறவுச் சொற்களைத் தெரிவு செய்து மொழி பெயர்ப்பை நிறைவு செய்வர். இவ்வாறு கூட்டியும், நீக்கியும், மாற்றுச் சொல் கொண்டு நிகரனாக்குவதுமான செயல்கள் பொதுவாக மொழி பெயர்ப்பில் விளையும் சிக்கல்களாகத் தோன்றலாம். இச்சிக்கல்களைக் கண்டறிந்து, தீர்வுகாண வேண்டும்; இத்தோடு ஒரு வாசகரைக் கவரத்தக்க வகையில் மொழி பெயர்ப்பு அமைப்பது மொழி பெயர்ப்பாளர் கடமையாகும்.

வாசகர் வாசகம் (3)

செந் தமிழை வாழ்த்து !

நஞ்சுண்ட சிவனோடு சாக்ரட் டீசை
நளினமுற ஒப்பிட்டார் தா.கு. அய்யா
நெஞ்சுரையும் ஒன்பதுவும் குறள் மெய்ப்பாடும்
நினைவூட்டி இலக்கியத்துள் அறமும் சாற்றி
விஞ்சுமுயர் மீமாம்சைக் கோட்பாட் டோடு
வியப்பூட்டும் தேடலெனும் கவிதை வார்த்து
கொஞ்சுமெழில் இயற்கையுடன் இறைவன் மாட்சி
குளிர்மழையாய்க் கொட்டும் செந் தமிழை வாழ்த்து !

இப்படிக்கு,
பாவலர் அறிவரசன், திருகோக்கி

பதற்றம் !

கவிவேந்தர் கா. வேழவேந்தன்

பதற்றமுடன் அவசரத்தில் முடிவெடுத்தே
பாண்டிமன்னன் நெடுஞ்செழியன் பழியைப் பெற்றான் !
கதைமுடித்துச் சிலம்பினையே கொணர்க ! என்று
காவலனும் கோவலனைக் கொல்லா விட்டால்,
பதிமதுரை எரிந்திடுமா? வெறியர் கூடிப்
பதற்றமுடன் பாபர்ம சூதி தன்னை
அதிவேக மாய்ஒருநாள் தகர்க்கா விட்டால்
அன்றாடக் களரிகள்ஏன்? அழிவும் ஏன்?ஏன்?

அவசரத்தில் விதிமீறிச் சாலை தன்னை
ஆபத்தாய்க் கடந்தவனோ சாவைக் கண்டான் !
அவசரத்தில் குறுக்குவழி சென்றே நாட்டில்
அதீதமுடன் பணம்குவித்தோன் சிறையைக் கண்டான் !
அவசரமாய் மாங்காயைக் கனிய வைத்தோன்
அருஞ்சுவையைக் காண்பதுண்டா? எனவே நாமும்
அவசரமாய் அவசரத்தைத் துறப்போம்; நந்தம்
அரியஉடல் நலங்காத்து நீடு வாழ்வோம் !

பதற்றமென்ன செய்கிறது? நரம்பை மெய்யைப்
பதைபதைக்க வைக்கிறது; கொதிப்பை ஏற்றி
இதயவலி சேர்க்கிறது; அணுக்க மானோர்
இணக்கத்தைக் குலைக்கிறது ! பெருக் கெடுக்கும்
மிதமில்லாக் காட்டாற்றால் ஏது நன்மை?
விளைச்சலெலாம் பாழ், பாழ், பாழ் ! அதனால் நாமும்
பதமுடனே அமைதிவழிப் பயணம் செய்வோம்;
பதற்றத்தீ அண்டாமல் பார்த்துக் கொள்வோம் !

மதுரைத் தமிழ்ச்சங்கத்துச்செந்தமிழ்க் கல்லூரிச் செயலாளரும், தமிழகத் தமிழ்ச்சங்கங்களின் கூட்டமைப்புத் தலைவருமான

கோச்சடை திருமிகு. இரா. குருசாமி பி.ஏ.

திருமதி. பாக்கியலட்சுமி திருமகனார்

செல்வன் : கு. மாரிமுத்து - செல்வி பிரீத்தி இவர்கள் திருமண விழாவில்

வாழ்த்தியருளிய பாமலர்

15.12.2013

வித்துவான் தா. குருசாமிதேசிகர்
தருமையாதீனப் புலவர்

கோச்சடையின் மடத்தீசர் முத்தையர் அருளால்
கோமானாம் குருசாமி திருமகனார் திருமணம்
கோலாகலமாகச் சீர் மிகுந்திடவே நிகழ்ந்தது !
குருமணியாம் மதுரையா தீனத்துப் பெரியார்
சீலமிகு செந்தமிழில் வல்லவர்கள், அரசியல்
செம்மையுடன் நடத்துபவர், பிரமுகர்கள் பலரும்
ஞாலத்தின் புகழேதான் வேண்டுமெனச் சொல்லும்
ஞானமிகு 'தேவாரம்' ஒலித்திடவே வாழ்த்தினர் !

தமிழ்வள்ளல் பாண்டித்துரைத்தேவர் புகழ்போல்
தமிழ்மணக்கும் மணமக்கள் வாழ்க வாழ்க ! தண்ணார்
தமிழ்தந்த வள்ளுவரின் குறள்போல வாழ்க !
தமிழ்ச்சங்க அழகுமலை செயல்திறம்போல் வாழ்க !
இமிழ்கடல் சூழ் கல்லூரிகள் பொருள்பண்ணும் வணிகமாய்
இருக்கையிலே அருள்பேணும் கல்லூரி தொடர்ந்தே
தமிழர்க்கு வழங்கிவரும் செயல்போல வாழ்க !
தமிழ் மண்ணில் அறம்பேணும் செயல்போல வாழ்க !

பொறியியலில் இருவருமே பொருத்தமுடன் பட்டம்
பொருத்தமாய்ப் பெற்றதனால் உச்சமானீர் ! வாழ்க !
தமிழொடும் குறள்நூல்போல் அன்பென்னும் குணத்தால்
தக்கவாறே அறம்பேணி தகைசான்ற சொல்லால்
நெறியார்ந்த நட்புடனே இல்லறத்தில் முன்னை
முதறிஞர் பாராட்ட சுற்றத்தார் மகிழ
அறிவார்ந்த தந்தைதாய் வாழ்த்திடவே இருவரும்
அருந்தமிழின் சொக்கருள் சிறப்புற்றே வாழ்க !

ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா

தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615

பதிப்பாசிரியர் : இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No. 5508/57 December 2013 MA/130/2011-2013
Posted at Madurai BPC on 25th of every month

செந்தமிழ்க் கல்லூரி

மதுரைத் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

முனைவர் மு. மீனா
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

இரா. குருசாமி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,

செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை - 625 001

From

SECRETARY
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by **V. Govindarajan**, published by **R. ALAGUMALAI** M.A., M.Phil. on behalf of **Madurai Tamil Sangam, Madurai** and printed at **Davam Printers, 32, West Masi Street, Madurai - 1,** and published at **54, Tamil Sangam Road, Madurai.** Editor **R. ALAGUMALAI** M.A., M.Phil.